## சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபை - 2014

சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று என்பவற்றையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 17 ஆம் இலக்க சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

அதிகாரசபையானது நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற அறவிடப்படாத கடன்பட்டோர் மீதிகள் தொடர்பில் சந்தேக கடனுக்காக ஏற்பாடு செய்வதற்கான கொள்கையை அறிமுகப்படுத்தியிருக்காததுடன் அத்தகைய ஏற்பாடுகள் 5 ஆண்டுகளை விட பழமைவாய்ந்த ரூபா 35,059,518 ஆன கடன்பட்டோர் மீதிகளிற்காக செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் தேறிய பற்றாக்குறை முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07

செயற்கையான 400 மீற்றர் ஓட்டப் பாதையை இடுவதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 112,582,167 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்திருந்தது. இருந்த போதிலும் சொத்துக்களிலிருந்து செயற்கையான ஓட்டப் பாதையை நீக்குவதற்கும் நியமத்தின் 80 மற்றும் 81 ஆம் பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறைக்கு விளைந்த நட்டங்களை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 148,406,912 தொகையான வேலை பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்ட கிரயம் மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், அந்த சொத்துக்கள் தொடர்பில் பெறுமானத் தேய்வுகளிற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக விளையாட்டு போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு மைதானங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் என்பவற்றினை ஒதுக்குவதற்காக ஐந்து நிறுவனங்களிடமிருந்து அதிகாரசபை பெறவேண்டிய ரூபா 3,498,073 தொகையான வருமானம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுடன் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான விளையாட்டு சங்கங்கள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களங்கள் என்பவற்றிலிருந்து பெறவேண்டிய மீதிகளை ஒப்பிடுகையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. சொல்லப்பட்ட வித்தியாசங்களிற்கான காரணங்கள் மற்றும் அவற்றின் திருத்தம் என்பவற்றினை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **நிறுவகம்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | |
|---|---|---|
| | **உரிய நிறுவகத்தின் கணக்குகளின் பிரகாரம் மீதி** | **அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் மீதி** |
| விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | இல்லை | 1,562,870 |
| இலங்கை கிறிக்கெட் | 20,773,845 | 25,753,845 |
| இலங்கை கைப்பந்துச் சங்கம் | 987,449 | 2,344,757 |
| இலங்கை கால்பந்துச் சங்கம் | 293,249 | 3,291,433 |
| இலங்கை பில்லியாட் மற்றும் ஸ்நூக்கர் சங்கம் | இல்லை | 18,434 |

(ஆ) உரிய பட்டோலைகளுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கின் மீதியை ஒப்பிடுகையில் ரூபா 101,986 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்களிற்கு எதிராக குறிப்பிடப்பட்ட சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| | **விடயம்** | **பெறுமதி** | **கிடைக்கப்பெறாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (அ) | முற்பணத்தில் பெறப்பட்ட வருமானம் | 136,444 | வருமானம் தொடர்பான விபரங்கள் |
| (ஆ) | பெறவேண்டிய மீதிகள் | 14,923,867 | நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | கடன்கொடுத்தோர் மீதிகள் | 4,936,741 | நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வு |
| (ஈ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 23,804,113 | பட்டோலைகள் |
| (உ) | மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் | 7,495,173 | காலப் பகுப்பாய்வு |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ஒரு ஆண்டினை விட பழமைவாய்ந்த மீதிகள் ரூபா 2,311,110 ஆனதுடன் அதிகாரசபை 13 நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய 5 ஆண்டுகளைவிட பழமைவாய்ந்த ரூபா 35,059,518 கூட்டு மொத்த தொகையான மீதிகளை அறவிடுவதற்கு வினைத்திறனான அளவீடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையானது 2006 ஆம் ஆண்டிலிருந்து 03 நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையாக இருந்த ரூபா 2,248,900 சில்லறை கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதகாரசபையானது அனுமதியில்லாமல் 04 தனியார் நிறுவனங்களிற்கு கடன் அடிப்படையில் சேவைகளை வழங்கியதற்காக பெறவேண்டியதாக இருந்த சில்லறை கடன்பட்டோர் மற்றும் ஏனைய மீதிகளின் கீழ் கட்டப்பட்டிருந்த ரூபா 768,604 மொத்தமான மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான அளவீடுகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாகவிருந்த ரூபா 44,057,831 தொகையான பெறுமதி சேர் வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகளுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 104(2) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களுக்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 366(சீ) | வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத மற்றும் ஆறு மாதங்கள் கடந்திருந்த ரூபா 251,655 மொத்தமான 14 காசோலைகள் மீது பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 395(சீ) | ஒவ்வொரு மாதங்கள் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கி கணக்கிணக்கங்கள் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (v) நிதிப் பிரமாணம் 754 | பொருளிருப்பு பத்தகங்கள் நிதியாண்டு முடிகையில் நாளதுவரையான வழியில் சமப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதிகாரசபையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) நிதிப் பிரமாணம் 755(1) | அவர்களுடைய கடமைகளை மீறிய அல்லது இடமாற்றம் பெற்றிருந்த அல்லது நீண்ட விடுமுறையில் உள்ள எந்தவொரு உத்தியோகத்தரும் அவருடைய திறமைக்கு அல்லது அந்த நோக்கத்திற்காக கையளிக்கப்பட்ட வேறு ஏதாவது உத்தியோகத்தர்கள், சகல அரசாங்க களஞ்சியங்கள் மற்றும் அவருடைய பொறுப்பிலுள்ள வேறு ஏதாவது ஆதனங்கள் என்பவற்றை கையளிக்க வேண்டியதுடன் களஞ்சியங்களிற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கோடல் பிரதிகளை பெறுவதற்கும் கையளிக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக இதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (vii) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபை 2015 யூன் 24 வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு | அனுமதிக்கப்பட்ட வருடாந்த பாதீடு ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 18 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருள்களிற்காக தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கை | கொள்வனவுகள் மீதான குறிப்புரைகள் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபார்சுகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ரூபா 2,323,873 மொத்தமான கொள்வனவு ஆண்டின் போது தனியார் நிறுவனங்களால் செய்யப்பட்ட விதப்புரைகள் மற்றும் சிபார்சுகளில் மூன்று நிறுவனங்களிடமிருந்து செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முன்னைய ஆண்டிற்காக ரூபா 80,466,127 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 71,308,087 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,152,040 ஆல் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. உள்ளக விளையாட்டரங்கின் வருமானத்தில் ரூபா 29,816,738 இன் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான பங்காற்றியிருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

அதிகாரசபையின் பற்றாக்குறை முன்னைய பல ஆண்டுகளிலிருந்து பெருமளவு அதிகரித்திருந்ததுடன் ஊழியர்களுடைய சம்பளம், படிகள் மற்றும் மேந்தலைக் கிரயங்களில் அதிகரிப்பு அதற்கான பிரதான காரணங்களாக இருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளின் விபரங்கள் பின்வருமாறு இருந்தன.

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| செயற்பாட்டு வருமானம் | 131,309,826 | 143,868,569 | 155,573,543 | 185,831,160 | 235,593,748 |
| ஏனைய வருமானம் | 646,369 | 719,628 | 906,139 | 2,226,687 | 1,268,724 |
| மொத்தத் செலவவினம் | 215,279,331 | 218,086,661 | 238,463,753 | 268,282,087 | 308,046,858 |
| வரிச் செலவினம் | 63,097 | 70,164 | 70,164 | 235,887 | 123,701 |
| மிகைகள்/ (பற்றாக்குறை) | (83,386,233) | (73,568,628) | (82,054,235) | (80,460,127) | (71,308,087) |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டு விடுதிகளின் பயன்பாடும் துஸ்பிரயோகமும்

(i) 42 அறைகளுடன் விளையாட்டு விடுதிகளின் மூன்று அறைகள் மூன்று ஆண்டுகாலமாக மூடப்பட்டிருந்த அதேநேரம் 800 சதுரஅடியினைக் கொண்டுள்ள குளிர்பானக் கடை 8 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், அதிகாரசபையானது உழைக்கப்பட்ட வாடகை வருமானத்தினை தானாக உறிஞ்சியிருந்தது.

(ii) 3 ஆண்டு காலமாக 2010 நவம்பர் 15 இலிருந்து ரூபா 9,120,000 வருடாந்த வாடகைக்காக அதிகாரசபைக்கு சொந்தமாகவிருக்கின்ற விளையாட்டு விடுதிகளை வாடகைக்கு விடுவதற்கு வெளித்தரப்பினருடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை 2011 மார்ச் 23 இல் சொல்லப்பட்ட குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு தீர்மானித்திருந்ததுடன் அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் கீழ் இது எடுக்கபட்டிருந்தது. ஆகவே, அதிகாரசபையானது 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக அண்ணளவாக ரூபா 15 மில்லியன் வருமானத்தை இழந்திருந்தது. மேலும், விடுதிகளின் 42 அறைகளில் நாளாந்த அறை வசதிகள் 15,330 ஆக உள்ளன, அதேநேரம் 4,157 நாட்கள் அல்லது 27 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) அண்ணளவாக 10 ஆண்டுகாலமாக பராமரிக்கப்பட்டிருக்காத 990 சதுர அடி சிற்றூண்டிச்சாலை 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமான கேள்வியாளரை தெரிவு செய்கையில் திருப்திப்திப்பட வேண்டுமென்ற வேண்டுகைகளை பின்பற்றாமல் 2015 ஆம் ஆண்டில் ரூபா 40,000 மாதாந்த வாடகையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் குத்தகை காலத்தின் காலாவதியின் பின்னரும் சிற்றூண்டிச்சாலை செயற்படுத்தப்பட்டது. மேலும், உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 990 சதுர அடியிலிருந்து 214 சதுர அடி மேலதிக இடம் சிற்றூண்டிச்சாலையின் அலுவல்களிற்காக பயன்படுத்தவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(iv) சலுகை வீதங்களில் அறைகள் வாடகைக்கு விடுவதால் உழைக்கப்பட்ட ரூபா 7.8 மில்லியன் வருடாந்த வருமானத்தை விட அறைகள், வரவேற்பு மண்டபம் மற்றும் கருத்தரங்கு மண்டபம் வாடகைக்கு விடுவதால் அதிகாரசபையால் மேலதிக வருமானம் உழைக்கப்பட முடிந்த போதிலும் அந்த விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) கட்டிட செயற்படுத்தல் மற்றும் மாற்ற அடிப்படை (பீஓரீ) என்பவற்றின் கீழ் றிஸ்ரா விடுதி மற்றும் மீள்நிர்மாணமாக விளையாட்டு விடுதிகளை பேணுவதற்கு ஜப்பான் கம்பனி மற்றும் அதிகாரசபைக்கு இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனம் உரிய ஜப்பான் கம்பனிக்கு அனுப்பப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் காலங்கடந்திருப்பினும் இத்திகதிவரை பின்தொடர் நடவடிக்கை அவற்றுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன வாடகையும் வாகன தரிப்பிட பேணுகையும்

நுழைவுச் சீட்டுக்களை பெறுவதன் மூலம் மாத்திரம் அதிகாரசபையின் 1.13 ஏக்கர் பரப்பளவுள்ள காணியில் அமைந்திருந்த வாகன தரிப்பிடத்திற்குள் சில வாகனங்கள் தரிப்பதிலிருந்து 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதிகாரசபையானது அந்த வாகனங்களிலிருந்து பெற வேண்டிய கட்டணங்களை அறவிடுவதற்கும் தரிப்பிடத்திலிருந்து அவற்றினை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. அனுமதிக்கப்பட்டிருக்காத வழியில் அந்த வாகனங்களை தரித்தமை காரணமாக ரூபா 704,049 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபையானது கண்காணிப்பு கமரா முறைமை பொருத்தியிருந்த போதிலும் ரூபா 13 மில்லியனை விஞ்சிய ஆண்டு வருமானத்தினை உருவாக்குகின்ற முழுத்தரிப்பிடத்தையும் உள்ளடக்குவதற்கு முறைப்படி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வெளிப்படையான மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசாளர் ரூபா 800,000 தொகையை வங்கியில் வைப்புச் செய்யாமல் மோசடி செய்திருந்தாரென காசுப் பற்றுச்சீட்டுக்களை பரீட்சிக்கையிலும் அந்த காசினை வங்கியிலிடுகையிலும் வெளிப்பட்டது.

(ஆ) சாதரிகளுடன் சேர்த்து அதிகாரசபைக்கு சொந்தமான இரண்டு கார்கள், ஒரு ஜீப் மற்றும் கப் வாகனம் பணிப்பாளர் சபையின் இரண்டு உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அமைச்சின் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்போரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் திருத்த செலவினங்களாக அதிகாரசபையால் ரூபா 2,998,587 மொத்தமான தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு வாகனம் சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளை 2014 திசெம்பர் 18 இல் விபத்திற்குள்ளாகி இருந்தது.

(இ) கணக்காய்வு தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு மாதங்களில், தலைவருடைய அலுவலகத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட காரியால உதவியாளரொருவர் உள்வருகை மற்றும் வெளிச் செல்லுகையை மோசடியான வழியில் பதிவு செய்திருந்ததுடன் செய்யப்பட்ட வேலை விபரங்களை வழங்காமல் மேலதிக நேரப்படியாக ரூபா 28,063 பெற்றிருந்தார்.

**4.3 ஒப்பந்த நிர்வாகத்தின் திறமையீனங்கள்**

சுகததாச தேசிய வியைாட்டுக்கள் கட்டிட தொகுதி அதிகாரசபையின் 400 மீற்றர் செயற்கை ஓட்டப்பாதையின் நிர்மாணம், ஒப்பந்த விலை ரூபா 126,799,400

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக நிதியேற்பாடுகள் எதுவும் இருக்கவில்லை என குறிப்பிடப்பட்டு முதலாவது கேள்வி கோரலில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த கம்பனியை இரத்து செய்து, திரும்பவும் கேள்வி கோருவதன் ஊடாக நிர்மாணத்திற்காக அனுபவமில்லாத ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார் மேலும், சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியில், அவற்றில் இரண்டு இரண்டாவது மதிப்பாய்விற்காக கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஏப்ரல் 21 இல் ஓட்டப் பாதை வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் ஓட்டப் பாதையின் முதலாவது மற்றும் இரண்டாவது வரிசைகள் குறுகிய இரண்டு வார காலத்திற்குள் சேதமடைந்திருந்தது. 2014 நவம்பர் 24 இல் காணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் ஓட்டப் பாதையின் முதலாவது மற்றும் இரண்டாவது வரிசைகள் பூரணமாக கழற்றி எடுக்கப்பட்டிருந்ததுடன் அஸ்பற் இடல் வரை தண்ணீர் தேங்கியிருந்ததுடன் ஓட்டப் பாதை விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கவில்லை என வெளிப்பட்டது.

(இ) ஓட்டப் பாதையில் எழுந்த தவறு காரணமாக, இறுதி பட்டியல் கொடுப்பனவு மற்றும் பிடி காசு முற்பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட சிபாரிசில் 2014 யூன் 24 இல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த கொடுப்பனவு நிதிப்பிரமாணங்கள் 136, 137, 138, 139 மற்றும் 156 இற்கு முரணாக செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஓட்டப் பாதையின் நிர்மாணங்களில் அனுபவமோ அல்லது தொழில் திறனையோ கொண்டிராத நிர்மாணத்தின் ஆலேசனை சேவைகளிற்காக சிவில் பொறியியலாளர் மற்றும் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) நியமிக்கப்பட்டனரென வெளிப்பட்டது. மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து நிர்மாணம் மீது பெறப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம், மழைகால நிலமை மற்றும் நிபுணத்துவ அறிவு மற்றும் ஓட்டப்பாதையை இடுகையில் பொருத்தமான பொறியியல் மேற்பார்வை இன்மையில் நிர்மாணம் மேற்கொண்டமையின் விளைவால் ஓட்டப் பாதைக்கு ஏற்பட்ட இரசாயன மாற்றங்களின் தாக்கம் மேற்குறிப்பிடப்பட்ட நிலைமையை பாதகமாக பாதித்திருந்ததென குறிப்பிடப்பட்டது.

(உ) 2010 மார்ச் 01 இல் சர்வதேச தடகள போட்டி சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு சான்றிதழுடன் பொருட்களைப் பயன்படுத்தியதால் முன்னரே தயாரிக்கப்பட்ட அல்லது முழுமையான கட்டுப்பாட்டு முறைமையில் ஓட்டப்பாதை நிர்மாணிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட நிபந்தனையை கேள்வி ஆவணத்தின் 6 ஆம் பிரிவின் 1-10 ஆம் பந்திகளால் நீக்கப்பட்டிருந்தது. அதே நேரம் இது கேள்வி ஆவணங்களை முன்வைத்த கேள்வியாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாணம் முதலாவது வகை ஓட்டப்பாதையாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த வகைத்

தடங்கள் உலக கிண்ண மற்றும் ஒலிம்பிக் போட்டிகளிற்காக மாத்திரம் தேவைப்படுகின்றன என்று மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்**

(அ) தொழில் முயற்சிகள் வள திட்டமில் முறைமையின் (ஈஆர்பி) தாபிப்பிற்காக ரூபா 2,908,160 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 16 கணனிகளில் மென்பொருள் பொருத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 472,103 பெறுமதியான சேவையகமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளையாத்துறை விடுதிகள் இருந்த காணி மற்றும் கட்டிடம் செயற்படுத்தப்படுகின்றதென மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அவற்றின் ரூபா 1,020,000,000 தொகையான மதிப்பிடப்பட்ட தற்போதைய சந்தை பெறுமதி தொடர்சியாக 30 ஆண்டு காலத்திற்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அறவிடவேண்டிய குத்தகை தொகை ரூபா 783,870,000 ஆக இருக்க வேண்டும். இதன்படி, உரிய ஆதனத்தை குத்தகைக்கு விடுவதன் மூலம் வருடாந்தம் ரூபா 26,129,000 ஆன தொகை உழைக்க முடியும். இருந்த போதிலும் இதை குத்தகைக்கு விடாமல், அதிகாரசபையானது விளையாட்டு விடுதிகளை செயற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், முன்னைய 4 ஆண்டு காலத்தின் போது விளையாட்டு விடுதிகளால் ரூபா 4 மில்லியன் சராசரி இலாபம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,063,823 கிரயத்திலான நூற்றியிரண்டு இருப்பு விடயங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் விடப்பட்டிருந்தது.

**4.5 ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் அமைச்சின் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அதேநேரம் முகாமைத்துவ சேவையின் உத்தியோகத்தர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீளாய்வாண்டின் போது அமைச்சர் அலுவலகத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இருந்தபோதிலும், அதிகாரசபையானது அவர்களுடைய சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் படியாக முறையே ரூபா 1,030,083 மற்றும் ரூபா 391,033 உம் இணைந்த படியாக ரூபா 20,912 உம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 2,000 வீதம் வருமானமாக அதன் கூட்டம் அல்லது செயற்பாடுகளிற்கான வாடகையால் உழைக்க முடிந்த விளையாட்டு விடுதிகளின் வரவேற்பு மண்டபம் 2011 யூலை 12 இலிருந்து விளையாட்டு சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

**4.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

சுகததாசா தேசிய விளையாட்டுக்கள் கட்டிடதொகுதி அதிகாரசசபையின் உள்ளக சிற்றூண்டிச்சாலையின் வாடகைக்குவிடல் பிழையான தகவல் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியாளருக்கு ரூபா 55,000 மாதாந்த வாடகையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேலும், கேள்வியாளரால் முன்வைக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட திகதி முரண்பாடாக இருந்தது.

**4.7 ஆளணி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி முறையே 328 மற்றும் 305 ஆக இருந்ததுடன் அத்தகையவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரம் இல்லாமல் 06 பதவிகளிற்கு இணைக்கப்பட்ட பத்தென்பது உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 10 பதவிகளிற்காக 30 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டரங்க உதவியாளர் பதவிகளிற்கு சேர்க்கப்பட்ட ஐம்பத்து நான்கு உத்தியோகத்தர்கள் உரிய கடமைகளிற்கு வெளியே வேறு கடமைகளிற்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், உதவிப் பணிப்பாளர் (விளையாட்டுகள்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதார் விளயாட்டுகள் பாடத்துடன் உரிய துறையில் 03 ஆண்டுகள் சேவை அனுபவத்துடன் முதலாவது பட்டத்தை கொண்டிருக்க வேண்டும். அதேநேரம் அதற்கு முரணாக உரிய தகைமைகளை கொண்டிராத உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவங்களைக் கொண்டிராத 06 விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

### 4.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளக விளையாட்டரங்கத்தின் பிரதான பகுதியின் மேற் கூரையில் பொருத்தப்பட்ட ஒலியூட்டல் கம்பம் மீளாய்வாண்டின் போது காணாமல் போயிருந்தது அதேநேரம் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பில் ரூபா 2,476,769 மொத்தமான பெறுமதி சேர் வரி அத்திகதியில் செலுத்தப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு அதிகாரசபை மீளாய்வாண்டின் போது ரூபா 833,768 தொகையான தண்டப் பணம் செலுத்தியிருந்தது.

## 5. கணக்களி தகைமையும் நல்ல ஆளுகையும்

### 5.1 உள்ளக கணக்காய்வு

மீளாய்வாண்டு தொடர்பான உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

### 5.3 செயல்நடவடிக்கை திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின்படி, நிதி மற்றும் பௌதீக இலக்குகளை காலரீதியாக அமுலாக்குவதை உறுதிப்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்ட நிதிகளின் வினைத்திறனான பயன்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்பாண்மையை குறிப்பிடுவதன் மூலம் பாதீட்டில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு

நடவடிக்கைக்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயல்நடவடிக்கை திட்டத்தில் இனங்காணப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையானது உரிய நேரத்தில் செயல்நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளின் அடைதலின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு முறையொன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டு
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு